2017 ஜூன் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திருமதி எஸ். விஜயதரணி, இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்களும் NEET தேர்வு சம்பந்தமான கேள்வியைத்தான் கேட்கப் போகின்றீர்களா? சரி, கேளுங்கள்.*

முற்பகல் 11–15

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வைப் பொறுத்தவரை, இந்தச் சட்டமன்றத்தில் அனைவரும் ஒருமித்த மனதோடு ஒரு சட்டத்தை இயற்றி, ஜனாதிபதி அவர்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு நாம் அனுப்பி வைத்திருந்தோம். ஆனால், இதுவரை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்யாமல் மத்திய அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. இதையே தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் இழைக்கும் துரோகமாக நான் பார்க்கிறேன். NEET தேர்வைப் பொறுத்தவரை தற்போது தேர்வு முடிவுகள் வந்திருக்கின்ற சூழ்நிலையில் நம்முடைய மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்றால், இந்தப் பிரச்சினையில் மாநிலத்தின் norms என்னவாக இருக்குமென்று நாங்கள் அறிய விரும்புகிறோம். அடுத்தபடியாக இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டுமென்றால் சட்டம் ஏற்கப்படவேண்டும். அதற்கான முயற்சியை விட்டுவிடாமல் தொடர்ந்து மேற்கொண்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அதற்குண்டான norms–ஐ அரசாங்கம் ஏற்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(இ) கூம்பு வடிவிலான ஒலிபெருக்கிகளைப் பள்ளிவாசல்களில் பயன்படுத்தக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், அதேபொருள் சம்பந்தமான பிரச்சினையா? வேறு பிரச்சினையா? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிவாசல்களில், சர்ச்சுகளில், கோயில்களில்*

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2017 ஜூன் 24

எல்லாம் கூம்பு வடிவிலான ஒலிபெருக்கிகள் இருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமென்று கடந்த 10 நாட்களாக காவல் துறை அதிகாரிகள் கெடுபிடி செய்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இதுசம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றம் அரசாங்கத்தின் அறிவுரையை எதிர்பார்த்து இருக்கிறது. தற்பொழுது நோன்பு காலம்; தொழக்கூடிய காலம்; பெருநாளை சந்திக்கிற நேரம். இதேபோன்ற சூழ்நிலை சென்ற வருடம் ஏற்பட்டபோது மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த கெடுபிடிகள் எல்லாம் தடுக்கப்பட்டன. நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். இப்பொழுது நோன்பு காலத்தில் இரவு நேரங்களில் காவல் துறை அதிகாரிகளிடம் தொடர்ந்து சொல்லி convince செய்ய வேண்டியதிருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து நேரடியாக அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 70 decibel அளவில்தான் வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் போதும். அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். கட்சிக்கு ஒருவருக்குதான் வாய்ப்புத் தருவது வழக்கம். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். எல்லோரும் எழுந்து வாய்ப்புக் கேட்டால், எப்படி என்னால் வாய்ப்புத் தரமுடியும்? Zero Hour–ல் இப்படி எல்லோரும் வாய்ப்புக் கேட்டால், நான் எப்படி சபையை நடத்துவது? திரு. அன்பழகன், வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள்.

(அ) பேரறிவாளனுக்கு பரோல் வழங்கிடக் கோருதல்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26 ஆண்டுகளாக வேலூர் மத்திய சிறையில் ஒருநாள்கூட விடுப்பு இல்லாமல் சிறைபட்டுக் கிடக்கிற பேரறிவாளன் விடுதலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பொருள் குறித்துதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.